பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 19 வியாழக்கிழமை (4-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 268

போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதை முன்னிட்டு

# 4 நாள்கள் போர் நிறுத்தம் செய்வதாக புலிகள் அறிவிப்பு

## அரசுத் தரப்பிலிருந்து இதுவரை பதில் இல்லை

வவுனியா, செப்ரெம்பர் 4

போலியோ தடுப்புச் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நாளையும், நாளை மறுதினமும் ஒக்ரோபர் 10 ஆம், 11 ஆம் திகதிகளிலும் போர் நிறுத்தம் மேற்கொள்ளவிருப்பதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள ஐ. நா. சிறுவர் நிதியத்தின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் அந்த அமைப்புககு கடிதம் அனுப்பியுள்ளார்.

மேற்படி தினங்களில் போர் நிறுத்தம் மேற்கொள்ளுமாறு ஐ.நா.சிறுவர் நிதிய இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோசப் மகாசே விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அறிக்கை கொடுத்தால் போதுமா? வெளிவரவும் வேண்டுமே......!

### ஜனாதிபதியிடம் அறிக்கை

கொழும்பு, செப். 4

கடந்த காலங்களில் காணாமல் போனோர் தொடர்பாக ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று ஆணைக் குழுக்களும் தமது அறிக்கைகளை நேற்று ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தன. (இ-3)

### ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம், செப். 4

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் கும்பாபிஷேகத்தை ஒட்டி இன்று முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை குடாநாடு முழுவதும் அதிகாலை 4 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்படும்.

யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கருணதிலக இதனை அறிவித்துள்ளதாக பலாலிவானொலி நேற்று இரவு தெரிவித்தது. (இ-3)

## நீர்ப்பாசனத் திணைக்கள வாகனம் மீது துப்பாக்கிச்சூடு

### அதிகாரி கொல்லப்பட்டார்

மட்டக்களப்பு, செப். 4

அம்பாறை - மகாஓயா வீதியில் அறந்தலாவையில் நேற்று மாலை 3.45 மணியளவில் நீர்ப்பாசனத் திணைக்கள வாகனம் மீது இனம்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதில் நீர்பாசனத் திணைக்கள அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

காயமடைந்த இருவர் மகாஓய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-21-3)

## முஸ்லிம் குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் நலன் தொடர்பாக நேரில் ஆராய முஸ்லிம் பிரமுகர்கள் அடங்கியகுழு ஒன்று இன்று மாலை யாழ்ப்பாணம் வரவிருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் பசீர், வர்த்தகர் மூவின் உட்பட பலர் இடம்பெறும் இக்குழு யாழ்ப்பாணத்தில் ஒருவாரம் தங்கி இருக்கும்.

அச் சமயம் இக் குழுவினர் தொண்டர் அமைப்புப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், யாழ். அரச அதிபர் ஆகியோரைச் சந்திப்பர். (இ-3-173-164)

## நேற்றுவரை 60 பேருக்கு மேல் சாராயம் அருந்தியதால் மரணம்

மட்டக்களப்பு, செப். 4

மட்டக்களப்பு மாவட்டத்தில் கள்ளச் சாராயம் குடித்த சம்பவத்தில் 60 பேர் உயிரிழந்துள்ளதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 42பேர் இறந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் 8 பேரும், களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில் 3 பேரும் உயிரிழந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கொக்கட்டிச்சோலையில் 6 பேர் இறந்ததாக அப்பகுதி பிரதேச செயலர் மட்டக்களப்பு அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

வெல்லாவெளிப் பகுதியில் உயிரிழந்தவர்களின் விவரம் நேற்றிரவு வரை கிடைக்கவில்லை.

அதேவேளை — எருவில் பகுதியில் உள்ள ஒரு மதுபான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட சாராயத்தைச் சோதனை செய்தபோது கலப்படம் செல்யப்பட்டமை தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

### கள்ளச்சாராயம் குறித்து புலிகள் ஒலிபெருக்கியில் எச்சரிக்கை

நச்சுத்தன்மை உள்ள சாராயம் விற்பனை செய்வதை உடன் நிறுத்துமாறும்—

கையிருப்பில் வைத்திருக்கும் அத்தகைய சாராயத்தை அழிக்கும்படியும் — விடுதலைப்புலிகள் மட்டக்களப்பில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு நகரில் இருந்து இத்தகைய சாராயம் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் —

அதனை விற்பனை செய்ய முயற்சிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — புலிகள் அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ளனர். (இ-21-3)

## 6 வயதுச் சிறுமி மீது பாலியல் வல்லுறவு!

### சந்தேகத்தில் சிப்பாய் கைது!!

யாழ்ப்பாணம், செப். 4

ஆறு வயதுச் சிறுமி ஒருவர் இராணுவச் சிப்பாய் ஒருவரினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானதாகக் கூறப்படும் சம்பவம் அச்சுவேலி, கதிரிப்பாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சிறுமியின் பெற்றோர் அருகில் உள்ள இராணுவக் காவலரணில் செய்த முறைப்பாட்டின் காரணமாகச் சிறுமியைப் பாலியல்வல்லுறவுக்குள்ளாக்கியதாகக் கூறப்படும் சிப்பாய் கைதாகி உள்ளார்.

பிரஸ்தாப சிறுமி பரிசோதனைக்காக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலையில் முதலாம் ஆண்டு பயிலும் இச் சிறுமி பாடசாலையால் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இச் சம்பவம் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

அதே சமயம் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உள்ளானதாகக் கூறப்படும் சம்பவத்தை ஈ. பி. டி. பி. யின் யாழ். அலுவலகம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்தச் சம்பவம் உயர் இராணுவ அதிகாரிகளின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டு சந்தேக நபரான சிப்பாய் கைதுசெய்யப்பட்டது குறித்து ஈ.பி.டி.பி. அமைப்பு தனது நன்றியைத் தெரிவித்துள்ளது. (இ-15)

## மதியாமடுப் பகுதியில் 2 ஆம் நாளாக படையினர் - புலிகள் கடும் மோதல்

### 5 போராளிகள் களப்பலி என அறிவிப்பு

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த இரு தினங்களாக மதியாமடுப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் தமது தரப்பில் 5 போராளிகள் களப்பலியானதாகப் ''புலிகளின் குரல்'' நேற்று அறிவித்தது.

அதே நேரம் — நேற்று இரவு ஓமந்தை வடக்குப் பகுதியில் ஊடுருவித் தாக்கியதில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் [illegible] வும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

### மக்கள் குடியிருக்காத வீடுகளில்

## ஓடுகள், கதவுகள், ஜன்னல்கள் களவாடுவோர் மீது நடவடிக்கை

மக்கள் குடியிருக்காத வீடுகளில் ஓடுகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் போன்ற தளபாடங்களைக் களவாடுவோர் மீதும்—

இப்படியான களவுப் பொருள்களை கொள்வனவு செய்வோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று 51 ஆவது படையணியின் அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியுள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொம்பென் விமான விபத்தில் 64பேர் பலி!

கம்போடியாத் தலைநகர் நொம்பென் விமானநிலையத்தில் வியட்நாம் நாட்டுப் பயணிகள் விமானம் ஒன்று நேற்று வீழ்ந்து நொறுங்கியதில் 64 பேர் கொல்லப்பட்டனர்; காயங்களுடன் நால்வர் உயிர்தப்பியுள்ளனர்.

பெரு மழை பெய்துகொண்டிருந்த சமயம் விமானம் தரையிறங்கியபோது விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களில் 24 பேர் தென்கொரியர்கள் ஆவர். (இ-3)

## அம்புலன்ஸ் கையளிப்பு

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பெறப்பட்ட அம்புலன்ஸ் வாகனம் ஒன்று தீவுப்பகுதி மக்களின் சேவைக்காக ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வைபவம் கடந்த 30 ஆம் திகதியாழ். செயலகத்தில்இடம்பெற்றது.

யாழ். அரச அதிபர் எஸ். சண்முகநாதன், யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. அமைப்பாளர் கே. வி. கே. ஜெகன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் ஆகியோர் உட்பட பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ)

## இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் இடமாற்றம்

கொழும்பு, செப். 4

இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் இவ்வாரம் இடமாற்றங்கள் இடம்பெறவிருக்கின்றன.

வடக்கு — கிழக்கு கூட்டு இராணுவ பிரதி கட்டளை இடும் அதிகாரியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சமரதுங்க எதிர்வரும் 8ஆம் திகதி சேவையில் இருந்து ஓய்வு பெறுகிறார். அதற்கு முன்னோடியாக அவர் விடுமுறையில் சென்றுள்ளார்.

அவரது இடத்துக்கு அனுராதபுரம் கூட்டுப்படைத் தலைமையக கட்டளை அதிகாரியாகப் பதவி வகித்த மேஜர் ஜெனரல் பற்றிக் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சின்னம்மா காசிப்பிள்ளை

(இணுவில் மேற்கு)

தோற்றம்: 02—05—1935

மறைவு: 03—08—1997

அன்பின் திருவுருவாய் அறத்தின் வழிநின்று
எம்மை எல்லாம் பண்புடனும் பாசத்தோடும்
வளர்த்து ஆளாக்கிவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே!
அன்புத் தலைவியே! அம்மாவே! உங்கள் நினைவால்
தினமும் சிறகொடிந்த பறவை போல
ஏங்கித் தவிக்கிறோம். உங்களை நாங்கள்
இனி உலகினிலே காண்பதெப்போ? தலைவியே!
அம்மாவே! எமக்கிங்கு ஆறுதல் சொல்வார் யாரோ?

ஆறாத் துயரில் இருக்கும் எமக்கு ஆறுதல் கூறி உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு **04-09-97** இன்று வியாழன் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னையின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''பென்னப்பா பதி''
இணுவில் மேற்கு,
இணுவில்.

(சி/1478)


சுப்ரா
கல்வி நிலையம்,
சித்தன்கேணி.

வினாவிடை வகுப்பு

A/L 98
CHEMISTRY
Mr. RAMESH B.Sc

ஆரம்பம்: 05-09-1997
வெள்ளி 3.00 P.M.
[47414]

சோளன் விற்பனைக்கு

மொத்தமாகவும், சில்லறையாகவும் தரமான சோளன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்;

பொது முகாமையாளர்.
யாழ். மா.வி.உ.ச.நு.கூ.
ச. சமாசம்,
இல - 111 பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [சி/1476]

எமது புதிய வெளியீடுகள்!

ஆனந்பாபு நடித்த
★ புது புது ராகங்கள்
நிழல்கள் ரவி நடித்த
★ காமாட்சி
ஒறிஜினல் பிரதி
★ காதல் வீரன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
[49430]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோமசுந்தரம் தங்கமுத்து

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் தங்கமுத்து 02-09-97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னச்சாமி என அழைக்கப்படும் தம்பையா சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், செந்தில்முருகன் (கனடா), இலட்சுமணன் (பிரான்ஸ்), தனலட்சுமி, டாக்டர் விஜயலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சுமதி (கனடா), ஜெயராணி (பிரான்ஸ்), ஜீவா (பரிஸ் மாட்ஸ் — யாழ்ப்பாணம்), தயா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. ஜீவா

இல. 17, 55 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.

(49420)

### ஸ்ரீமதி இராஜலட்சுமியம்மா சபாரட்ணஐயர்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணஐயர் இராஜலட்சுமி அம்மா 02-09-1997 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தியாகராஜக்குருக்கள் (முன்னாள் நெல்லண்டைப் பத்திரகாளி தேவஸ்தான பிரதமகுரு) அவர்களின் அன்புத் தாயாரும், மாமியாரும், சோமஸ்கந்தராஜக்குருக்கள் (கண்ணன் ஐயர், நெல்லண்டைப் பத்திரகாளி தேவஸ்தான பிரதமகுருவும், யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர்), விஜயலட்சுமி, வேதையாக்குருக்கள் (ரூசியா), வியோமசேகர் (ஜேர்மனி), அமிர்தகடீசன் (அல்வாய், சாமணந்துறை ஆலடிப் பிள்ளையார்கோயில் பிரதம அர்ச்சகர்), வரலட்சுமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரபாலினி, ஜீவிதலி, தனஞ்சயன், சங்கீர்த்தலி, சித்பவன், இலட்சனாதனுஜா, ஹம்சாயினி, விதுசாஜெனி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பேரன் சிவஸ்ரீ தியாகசோமஸ்கந்தராஜாக்குருக்களின் இல்லத்தில் 3-9-97 நேற்று புதன்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ. தியாகசோமஸ்கந்தராஜக்குருக்கள்
'தங்கபுரம்'
நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

(49422)

### திருமதி அந்தோனிப்பிள்ளை அன்னம்மா

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்கைச் சேர்ந்த திருமதி அந்தோனிப்பிள்ளை அன்னம்மா யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியாவார். அன்னாரின் பூதவுடல் 04-09-97 இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
யோ. திருஞானம்
(ஆசிரியர்)

இல. 10, புனித செபஸ்ரியார் ஒழுங்கை,
பாங்சால் வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

(49428)

### சச்சிதானந்தம் விஜயகுமார்

சச்சிதானந்தம் விஜயகுமார் 30-08-1997 அன்று இத்தாலியில் அகால மரணமானார்.

அன்னார் திரு. திருமதி சச்சிதானந்தம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற காராளசிங்கம் - றோசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், நந்தினியின் (றதி, கல்வித் திணைக்களம்) அன்புக் கணவரும், ஜீவகனின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-09-97 அன்று இத்தாலியில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பழனிமலைநாதன்,
ந. மகேந்திரநாதன்.

22, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(49401)


NEW SCIENCE ACADEMY

கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

98 A/L துரித மீட்டல் வினா விடை வகுப்புக்கள்

[97A/L பரீட்சைக்கு தோற்றிய புதிய, பழைய பாடத்திட்டத்திற்கமைவானது]

| பாடங்கள் | WEEKEND CLASSES | DAY CLASSES |
|---|---|---|
| பௌதிகவியல் | திரு. ஜோதிலிங்கம் | திரு. குமரன் |
| இரசாயனவியல் | திரு. மணியம் | திரு. சிவத்திரன் |
| தாவரவியல் | திரு. குணசீலன் | திரு. சதீஸ் |
| விலங்கியல் | திரு. கெங்காதரன் | திரு. கெங்காதரன் |
| தூய ) பிரயோக) — கணிதம் | திரு. குணம் | திரு. வெக்டர் |
| ஆரம்பம்: | 07-09-97 ஞாயிறு காலை 8.00 மணி | 05-09-97 வெள்ளி காலை 7.00 மணி |

(49413)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயானாவின் இறுதிச் சடங்கில் ஹிலாரி, தெரேஸா, சோனியா!

## ஐ.நா. பொதுச் செயலரும் கலந்து கொள்வார்

லண்டன், செப். 4

எதிர்வரும் சனிக்கிழமை இளவரசி டயானாவின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் போது ஒரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்குமாறு பக்கிங்ஹாம் அரண்மனை கேட்டுள்ளது.

இறுதிச் சடங்குகளில் அழைக்கப்பட்ட 2 ஆயிரம் பிரமுகர்களும், அரச குடும்பத்தினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் டயானாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள மாட்டார் என வெள்ளை மாளிகை தெரிவித்தது.

அமெரிக்க மக்களின் சார்பில் அமெரிக்காவின் முதற் பெண்மணி ஹிலாரி கிளின்ரன் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை — ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து அன்னை தெரேசாவும், திருமதி சோனியா காந்தியும் இறுதிச் சடங்குகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

உலகின் பல நாடுகளில் இருந்து மேலும் பல தலைவர்கள் மரணச் சடங்கில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ)

### உலக அரங்கில்

## அமெரிக்கா வரவேற்பு

நொம்பென் செப். 4

கம்போடியாவில் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித்துக்கும் அதிகாரத்தில் உள்ள பிரதமர் ஹுன் செனுக்கும் இடையே சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தி உள்நாட்டுக் கலவரத்தினை முடிவுக்குக் கொண்டுவர மன்னர் நொரடோம் சிஹனூக் எடுத்து வரும் முயற்சிகளை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தலைவர்களும் இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது.

ஆனால் கம்போடியாவின் பெரும்பாலான பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் ஹுன் சென் அமைதிப்பேச்சுவார்த்தைக்கு எவ்வித ஆதரவையும் தெரிவிக்கவில்லை. (ஐ-5)

## தலைநகருக்கு டயானாவின் பெயர்

லண்டன், செப். 4

கரீலியன் தீவான மான்சரஸ்ரின் நிர்வாகிகள் அந்தத் தீவின் புதிய நகரத்துக்கு டயானாவின் பெயரைச் சூட்டியுள்ளனர்.

புதிய தலைநகர் இனிமேல் 'போட் டயானா' என்று அழைக்கப்படும்.

எரிமலை வெடிப்பினால் இந்தத் தீவின் பழைய தலைநகர் பாதிக்கப்பட்டதை அடுத்து அது பின்னர் கைவிடப்பட்டது.

(ஐ)

## ஜெரி அடம்ஸ் அமெரிக்காவில்

நியூயோர்க் செப். 4

ஐ. ஆர். ஏ. இயக்கத்தின் அரசியல் பிரிவான சின்பீனின் தலைவர் ஜெரி அடம்ஸ் 5 நாள் விஜயம் மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளார்.

அமெரிக்காவில் தங்கிஇருக்கும் போது அவர் கிளின்ரன் நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகளையும் அரசியல் தலைவர்களையும் சந்திப்பார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமேநல்ல சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

(ஐ - 5)

## செனகல் நாட்டு மக்கள் அயல் நாடுகளில் தஞ்சம்

செனகல் நாட்டின் தென் மாகாணத்தில் இடம்பெற்று வரும் வன்செயல்களை அடுத்து சுமார் 2 ஆயிரம் அகதிகள் அங்கிருந்து அயல் நாடானகாம்பியாவுக்குஇடம் பெயர்ந்து சென்றிருப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

1982 இல் ஆரம்பித்த கிளர்ச்சி செனகலில் முடிவின்றித் தொடர்கிறது. (ஐ)

# எங்கள் வாழ்வின் ஒளி அணைந்து விட்டது...!

## கண்ணீர் மல்கும் பிரிட்டிஷ் மக்கள்

இளவரசி டயானாவின் மறைவு பிரிட்டிஷ் மக்களிடையே முன்னெப்போதும் ஏற்பட்டிராத சோக அலையைத் தோற்றுவித்திருக்கிறது.

லண்டன் நகர வீதிகள் சோபையிழந்து காணப்படுகின்றன. தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் விசேட ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. பொது நிகழ்ச்சிகள் பல ஒத்திவைக்கப்படுகின்றன.

டயானாவை நினைவு கூர்ந்து பொது இடங்களிலும் அவரது ஹென்சிங்டன் மாளிகை முன்பாகவும் லட்சக் கணக்கான மலர் வளையங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இளவரசியின் இல்லமான ஹென்சிங்டன் அரண்மனைக்கும், பக்கிங்ஹாம் அரண்மனைக்கும் வெளியே துயரம் தோய்ந்த முகத்துடன் நூற்றுக்கணக்கானோர் குழுமியுள்ளனர்

டயானாவுக்கு தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தவும், அங்குள்ள அனுதாபப் பதிவேட்டில் தங்கள் குறிப்புகளை எழுதவும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் நீண்ட வரிசையில் தொடர்ந்து காத்து நிற்கிறார்கள்.

கவலை தாளமுடியாத பலர் தங்கள் உணர்ச்சிகளை வார்த்தைகளாக வெளிப்படுத்துகின்றனர்.

''டயானா மக்களின் இளவரசி. சொந்த வீட்டில் அவருக்கு அமைதி இருக்கவில்லை; நம்பிக்கை இருக்கவில்லை. நாங்கள் எந்த நேரமும் அவரைப்பற்றியே சிந்தித்த வண்ணம் இருக்கிறோம். எங்கள் வாழ்வின் ஒளி அணைந்து விட்டது போன்ற உணர்வு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.'' — என்று அஞ்சலி செலுத்த வந்த பெண் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

உலகின் பல பகுதிகளில் இருந்தும் 20 லட்சம் பேர் 'இன்ர நெற்' கணனிவலைத் தொடர்பு மூலம் தொடர்பு கொண்டு டயானாவின் வாழ்க்கை வரலாற்றைப் படித்து அறிந்து கொண்டதுடன் அனுதாபச் செய்திகளையும் வழங்கியுள்ளதாகவும் பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

# யாழ். கால்நடை நிலையத்துக்கு ஜேர்மன் இன கடாய் ஆடுகள்

திருநெல்வேலி, செப். 4

மறி ஆடுகளைச் சினைப்படுத்துவதற்காக யாழ். கால்நடை உற்பத்தி சுகாதார நிலையத்துக்கு ஏழு கடாய் ஆடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஜேர்மனியில் இருந்து பெறப்பட்டுள்ள இந்தக் கடாய் ஆடுகள் செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படவுள்ளன.

வளர்ப்பு ஆடுகளுக்கு சினைப்படுத்த விரும்பும் பொது மக்கள் தத்தமது பகுதியிலுள்ள கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், செப். 4

பித்தளையை உருக்கும் தொழிற்சாலை ஒன்றில் பித்தளைகளை உருக்கிக் கொண்டிருந்த போது திடீரெனப் பயங்கர சத்தத்துடன் வெடித்த ஏதோ ஒரு பொருளின் சிதறலினால் ஒருவர் காயமடைந்தார்.

கோப்பாய் வடக்கில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் இராசு பிரதீஸ்வரன் (வயது-16) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

# தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனாதிபதியை இன்று சந்திக்கும்

கொழும்பு, செப். 4

இன்றைய அரசியல் நிலை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்குழு ஒன்று இன்று ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தவிருக்கிறது.

அரசு முன்வைத்துள்ள தீர்வுப் பொதி குறித்து எழுந்துள்ள எதிர்ப்புக்கள் தொடர்பாகவும், தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினைகள் குறித்தும் இப்பேச்சின்போது ஆராயப்படும்.

அதேநேரம் — எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் கூட்டணிக் குழு சந்திக்கவிருக்கிறது

(இ-150-3)

## ஆலோசனைச்சபை

தென்மராட்சி செப், 3

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி ஆலோசனைச் சபையை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாகாண சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். (இ-117)

# 200 மீனவர்களுக்கு இன்னும் மீன்பிடிவலை கிடைக்கவில்லை

பற்றுச்சீட்டுப்புத்தகம் இல்லாததால் அரசினால் வழங்கப்பட்ட மானிய அடிப்படையிலான மீன்பிடிவலைகளை 200 மீனவர்களுக்கு வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளதாகத் தெரிவிக்க்ப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 500 மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் மீன்பிடி வலைகள் வழங்கப்படுவதற்கு கடற்றொழில் அமைச்சு அனுமதி வழங்கி இருந்தது.

கடந்த மாதம் 300 மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டிருந்தன.

மிகுதி 200 மீனவர்களுக்கும் வலைகளை வழங்குவதற்கு உரிய பற்றுச்சீட்டுப் புத்தகம் சீநோர் நிறுவனத்தில் இல்லாமையால் வலைகளை வழங்க முடியாமலுள்ளது. (இ-5)

# இந்திய அணியில் கும்ளே அவுட்! டெண்டுல்கரே தொடர்ந்துகப்டன்

மும்பே, செப். 4

பாகிஸ்தான் அணியுடன் கனடாவில் நடைபெறவுள்ள 'சஹாரா' கிண்ண ஒரு நாள் போட்டித் தொடரிலும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள பொன்விழா ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரிலும் பங்கு பற்றவுள்ள இந்திய அணியில் சுழல் பந்து வீச்சாளரும், இந்திய அணியின் உப தலைவருமான அனில் கும்ளேயும் வேகப் பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத்தும் சேர்க்கப்படவில்லை.

இவர்களுக்குப் பதிலாக கனிஷ்சர், அரவிந்தசிங் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விக்கெட் காப்பாளர் மொங்கியாவும் அணியில் சேர்க்கப்படவில்லை.

இந்த இரு போட்டித் தொடருக்கும் சச்சின் டெண்டுல்காரே இந்திய அணிக்குத் தலைமை வகிக்கிறார். அணியின் உப தலைவராக அஜே ஜடேஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ- 10)

### விளையாட்டு அரங்கு

உ

தெல்லிப்பழை அருள்மிகு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**மகா கும்பாபிஷேக**

விழாவை முன்னிட்டு

**இன்றைய நிகழ்ச்சிகள்**



துர்க்கை அம்மன் தெல்லிப்பழை

காலம்: **04 - 09 - 97**

வியாழக்கிழமை

காலை **9.00** மணி

சாந்தி ஹோமம், மூர்த்திஹோமம், நவக்கிரக ஹோமம்.

மாலை **1.00** மணி

சம்ஹிதா ஹோமம், வாஸ்துசாந்தி, பேரீதாடனம்.

[சி/1469

நிர்வாகசபை,
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பலஇன கலர் வளர்ப்பு மீன்கள் மற்றும் மீன் தொட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குட்டி 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லிக்கல்லூரியின் முன் ஒழுங்கை) நேரம் காலை 11 மணியிலிருந்து. [49374]

### தவறிவிட்டது

அல்வாய் அத்தாயைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி பரந்தாமன் என்பவரது தேசிய அடையாள அட்டையும், (506090610V), விசேட அடையாள அட்டையும் பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சதா பொன்ஸ், மாலுசந்தி, அல்வாய். [சி/1462]

### காணவில்லை

க. இராசேஸ்வரன் என்பவரது வீட்டு வளர்ப்பு நாய் (பொமெரியன் பிறவுண் நிறம்) காணாமற் போய் விட்டது. இதனைக் கண்டவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். க. இராசேஸ்வரன், இல. 134, ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். [49387]

## மண்எண்ணெய் பெறுமாறு கோரிக்கை

கடந்த மாதம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் இருகட்டங்களாக விநியோகிக்கப்பட்ட 3லீற்றர் மற்றும் ஒன்றரை லீற்றர் மண்எண்ணெயை சங்கத்தின் கிளைகளிலோ எரிபொருள் நிரம்பு நிலையங்களிலோ இதுவரை பெறாவதர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.ப.நோ.கூ. சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/நயினாதீவு**
**ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்**
**5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு - 1995**

சித்தியடைந்தோர் விவரம்:

செல்வன் உதயபாரதலிங்கம் தமிழ்மாறன் - 131புள்ளி
செல்வி அம்பிகைபாகன் ஸ்ரீரங்கா - 116புள்ளி
செல்வி கந்தசாமி துவாரகா - 108புள்ளி

இம் மாணவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பெற்றோர், பழைய மாணவர்கள், யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்.**

(49388)

## திருமண வாழ்த்து

**திருநெல்வேலி திரு. திருமதி ச. தணிகாசலம் அவர்களின் செல்வப் புதல்வன்**
**செல்வன் பாலகுமாரன்** (லண்டன்)
அவர்களுக்கும்
**கைதடி திரு. திருமதி வ. முத்துக்குமாரசுவாமி அவர்களின் செல்வப் புத்திரி**
**செல்வி கௌரிக்கும்** (ஆஸ்திரேலியா)
அவர்களுக்கும்
**04 - 09 - 97 வியாழக்கிழமை இன்று**

ஆஸ்திரேலியா ஸ்ரீ வக்கிர துண்ட விநாயகர் ஆலயத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது.

மணமக்களைத் தலங்காவற் பிள்ளையார், ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்மன், நல்லைக் குமரனின் அருள் பெற்று நீண்ட ஆயுளுடனும் சகல சௌபாக்கியங்களுடனும் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

மணமகனின் மைத்துனர்: க. கணேசநாதன்
சகோதரிமார்: க. ஞானசக்தி
த. ஆனந்தசக்தி
மருமகள்: க. விஷாலினி

புலவர்வளவு,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [49266]

## காணவில்லை

அளவெட்டி வடக்கு, வீரபத்திரர் கோயிலைச் சேர்ந்த
**உருத்திரமூர்த்தியின் மகன்**
**உ. பரந்தாமன்**
என்பவரை கடந்த 3 மாதங்களாகக் காணவில்லை. இவர் ஒரு மன நோயாளி ஆவார். இவரைப்பற்றிய தகவல்தெரிந்தால்பின்வரும் முகவரியில் அறியத்தரவும்

**MISS. R. சண்முகராஜா,**
C/o R. சுகாஜனன்,
165, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[49399]

உ

## சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் மஹாகும்பாபிஷேக விழா

அன்புடையீர்!

நாளைய தினம் **05 - 09 - 97** வெள்ளிக்கிழமை அதிகாலை 6.52 மணி - 8.04 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற அம்பாள் திருவருள் கூட்டி உள்ளாள். அன்னை அடியார்கள் நேரம் தவறாது வருகை தந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெறவும்.

நன்றி.

**பிரம்மஸ்ரீ ப. மகாகணபதிசர்மா,**
**தர்மகர்த்தா.**

(49280)

## UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME
## ( U. N. D. P )
**121 A, TEMPLE ROAD, JAFFNA.**

**POST OF ACCOUNTS CLERK:**

Applications are invited from suitable candidates who possess a minimum of 5 years experience in the relevant field.


Typing knowledge, Computer literacy and ablity to work indipendently are essential.

**Closing date: On or before 10 th Sept. 97**

**- UNDP -**

[49395)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



**அமரர் சிவகுரு கணபதிப்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியர்)
மலர்வு: **25—12—1910** உதிர்வு: **14—09—1996**

**திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியை)
மலர்வு: **25—12—1909** உதிர்வு: **14—09—1996**

கருத்தொருமித்த வாழ்வு வாழ்ந்து, மரணத்திலும் இணைந்த கட்டப்பிராய் முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலகராக இருந்த, சக்தி தாசர் அமரர் கணபதிப்பிள்ளை தம்பதிகளின் ஓராண்டு நினைவு அஞ்சலி ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்கான அழைப்பு.


**04-09-97** (வியாழக்கிழமை) இன்று இவர்களின் ஆண்டுத் திதிக் கிரியைகளும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் கட்டப்பிராயில் அவர்களது இல்லத்தில் நடைபெறும்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம், [illegible]

## 31 ஆம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 15 — 03 — 1947



மறைவு: 05 — 08 — 1997

**அமரர் பொன்னுத்துரை யோகநாதன்**
(வர்த்தக முகாமையாளரும்/ பதில் பொது முகாமையாளரும், நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பணியாளர் சி. கூ. ச. தலைவர்)

04-09-97 இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

— மனைவி, மகள்,
குடும்பத்தினர்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(49375)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்

நல்லூர் சிவன் கோயிலில் சென்ற மாதம் பிராமண இளைஞர் சமாஜத்தினால் நடத்தப் பெற்ற வேதசிவாகம விழாவில் எமக்குப் பாராட்டளித்துக் கௌரவித்த ஷெ சமாஜத்தினருக்கும் விழாவுக்குத் தலைமைவகித்துச் சிறப்பித்த

**பேராசிரியர்**
**பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணன்**
ஆசிவழங்கிய
வித்தியாகுரு **கி. சுப்பிரமணியசாஸ்திரிகள்**
(தர்மசாஸ்தா குருகுல அதிபர்)

ஆகியோருக்கும், ஏனைய குருமணிகள், கவிபுனைந் தளித்த கவிமாமணி, இந்து குருமார் ஒன்றியம், நியந்தரீஸ்தாபனம், சிவானந்த குருகுலம், சேர் பொன். இராமநாதன் வேதாகமநிறுவனம், கெருடாவில் கந்தசாமி கோயில், சாவ. துர்க்கையம்மன், நல்லூர் சிவன் தேவஸ்தானங்கள், நல்லைஆதீன குருமணி, பாசமிகு உறவினர், நண்பர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சுபம்

''சிக்ஷாநிபுண''
கி. சதாசிவசர்மா

''கீதாலயம்''
மட்டுவில்.

(49405)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/சித்தங்கேணி சிறி கணேசவித்தியாலயம்
### 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் தேர்வு - 1995

சித்தியடைந்தோர் விவரம்:

1) சி. சயந்தன் — 157 புள்ளி
2) இரா. செந்தூரன் — 150 புள்ளி

பெற்றுச் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இவர்களை மிகவும் ஊக்கமளித்துக் கற்பித்த ஆசிரியர்களையும் அதிபரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்.**

(49412)

# வாழ்த்துகின்றோம்

### ஆண்டு- 5 புலமைப்பரிசில் பரீட்சை - 1995

## யா/சுதுமலை சிந்மய பாரதிவித்தியாலயம்

சித்தியடைந்தோர் விவரம்;

| பெயர் | | பெற்ற புள்ளி |
|---|---|---|
| செல்வன் க. கபிலன் | — | 140 |
| செல்வன் அ. சங்கீர்த் | — | 133 |
| செல்வன் த, விவேகதாரன் | — | 131 |
| செல்வன் த. றொசாந்தன் | — | 116 |
| செல்வன் வி. சஞ்ஜீவன் | | 115 |
| செல்வன் தெ. சிவதரன் | — | 113 |
| செல்வன் கை. கஜேந்திரன் | — | 111 |
| செல்வி சி. லிவிந்தா | — | 111 |
| செல்வன் இ. சுதர்சன் | — | 108 |

இப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், இம் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து கற்பித்த ஆசிரியர்களையும், ஊக்குவித்த அதிபரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/சுதுமலை சிந்மய**
**பாரதி வித்தியாலயம்,**
**மானிப்பாய்.**

(49402)

# மயானத்தில் பற்றைகள்

சண்டிலிப்பாய், செப். 4
பண்டத்தரிப்பு விளான் வெளி இந்துமயானம் பற்றைகளும், முட்புதர்களும் நிறைந்த இடமாக உள்ளது.

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சில்லாலை, சித்தன் கேணி, சங்கானை கிழக்கு, தொட்டிலடி, பிரான்பற்று ஆகிய பல கிராமங்களிலுள்ள இந்து சமயத்தவர்களுக்கான ஒரே ஒரு மயானமான இந்த மயானத்தில் உள்ள இரு சிறிய மடங்களும் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

வெயில், மழைக்காலங்களில் மயானத்திற்கு இறுதிக் கிரியைகளுக்கு வரும் மக்கள் தங்கிநிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-135)

# பண்டித வகுப்புகள்

திருநெல்வேலி, செப். 4
நல்லை ஆதீனத்தில் நடைபெற்று வந்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச, பால பண்டித வகுப்புகள் மீண்டும் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளன. வகுப்பு ஒருங்கிணைப்பாளர் காரை, மு. பா. அருளானந்தம் இத்தகவலைத் தெரிவித்தார்.

(ஐ-135)

# கடற்றொழில் பரிசோதகர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், செப். 4
யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு போதியளவு கடற்றொழிற் பரிசோதகர்கள் இல்லை என்று மாவட்ட கடல் தொழில் விரிவாக்க அதிகாரி எஸ். ஏ. ஜோசப் தெரிவித்தார்.

21 கடற்றொழில் பரிசோதகர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில் தற்போது 8 பேர் மட்டுமே பணியாற்றுவதாகவும் —

இவர்களில் மூவர் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர்களாகப் பதவி உயர்த்தப் பட்டுள்ளனர் என்றும் —

மிகுதி 5 பேரில் இருவர் சேவை நீடிப்பு அடிப்படையிலேயே பணியாற்றுவதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

# புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 4
சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டினைமுன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் அதிபர் அ. ஸ்ரீகுமாரன் தலைமையில் நடைபெறும். யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். முதற்பிரதியை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பெற்றுக்கொள்வார்.

(ஐ-5)

# திறப்பு விழா

திருநெல்வேலி, செப். 4
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இந்துமாமன்றத்தின் ஆதரவில் புதிதாக அமைக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.
(ஐ-135)

அம்மாவும் அப்பாவும் நானும் — தந்தையின் கிராமம்

**ஓவியம் படைத்திடுவீர்!**

— விவரங்கள் 07-09-97 உதயனில் —

பாழடைந்த கோயிலின் பரம்பொருள் — சித்தம் அழகியார்

## மருதனார் மடம்
## ஸ்ரீ பல்லப்ப வைரவர் தேவஸ்தானம்
## வசந்தமண்டப சுந்தர விமான தூபி
# கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நாளை வெள்ளிக்கிழமை 05-07-97 காலை 7-00 மணி முதல் 8-00 மணி வரை கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும். அடியார்கள் கலந்து கொண்டு அருள் பெறுக.

**க. சுப்பிரமணியம்**
(ஆலய பரிபாலகர்)

(கி-1473)

## வடமாகாண புற்றுநோய் - எய்ட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கம்
# வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 6-9-97 சனிக்கிழமை நடைபெற இருந்ததைத் தவிர்க்க முடியாத காரணத்தால் 27-9-97 சனிக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளமையை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தரப்படுகின்றது.

தலைவர்,
வைத்தியகலாநிதி
**இ. தெய்வேந்திரன்,**
வடமாகாண புற்று நோய்த் தடுப்புச் சங்கம்.

(சி/1466)

# ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில்:
21 - 03 - 1978



காலன் பிடியில்:
15 - 09 - 1996

## சந்திரசேகரம் சந்திரகாந்தன்
(மகாஜனாக் கல்லூரி மாணவன்)

பதினெட்டு வருடமாய் பாசமென்னும் நெய்யூற்றி பாடுபட்டுவளர்த்தெடுத்த எங்கள் அன்புச் செல்வமே! நீர் வாழும் வயதினிலே செங்கண்மாரி என்னும் கொடிய நோயால் காலன் உமது பொன்னுயிரைப் பறித்தானே! உமது வண்ணமுகம் காணாமல் உனைப் பெற்றவள் கண்ணீரால் நனைகின்றாள்.

காந்தா! ஆண்டொன்று சென்றதையா, பல ஆண்டுகள் சென்றாலும் அழுதாலும் தீராது ஆறுமோ எம்துயரம். ஆறாது ஆறாது மீண்டும் ஒரு பிறவி எடுத்து எங்கள் துயர் நீக்கிடுவாய்,

எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு அம்மா, அண்ணாமார், அம்மம்மா, மாமாமார், மாமிமார், மைத்துனர்கள், சித்தப்பா, சித்தி, உடன் பிறவா சகோதரர்கள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

பன்னாலை, தெல்லிப்பழை.
தற்காலிக விலாசம்:
இளவாலை வடக்கு.

(47412)

உ

## சுழிபுரம் - பறாளாய்
# ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

**நாளை (05-09-1997) ஈசுரவிநாயகரின் பாற்காவடித்தினம்**
**"நம்பினோர் கெடுவதில்லை; நான்கு மறைத் தீர்ப்பு"**

பிறைசூடிக்குரு —சந்ததிப் பூசகர்.

(49414)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிற்போடப்பட்டுள்ளது

01-09-1997 இல் அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த, யாழ். ஆத்திசூடி வீதி, அன்னமார் ஈஸ்வரர் ஆலய அதிர்ஷ்ட லாபச்சீட்டுக்கள் 01-11-1997 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

பரிபாலன சபை,
அன்னமார் ஈஸ்வரர் ஆலயம்.

(49394)

## அலுவலகம் திறப்பு

தென்மராட்சி, செப். 4

தென்மராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்திச் சங்கத்தின் அலுவலகம்கடந்தவாரம் சாவகச்சேரி தபாலக வீதியில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் பி.விஜயகுமாரினால் திறந்து வைக்கப்பட்டது.

(ஐ-117)

# தென்மராட்சிகுளங்கள் வற்றின கால்நடைகள் நீரின்றி அவதி

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பல குளங்கள் வற்றி வரண்டு விட்டதால் கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்காக அலைந்து திரிவதைக் காணமுடிகிறது.

கடந்த வருடம் இப் பகுதியில் மழை வீழ்ச்சி குறைவாக இருந்ததால் குளங்கள் கடந்த ஏப்ரல் மாதத்திலேயே வரண்டு காய்ந்து போனமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை நீண்ட நாட்களாக மழை பெய்யாததால் பயன்தரு மரங்கள் பல காய்ந்து கருகும் நிலையில் உள்ளன. (117)

## எழுதுநர் போட்டிப்பரீட்சை

**பொது உளச்சார்பு**
மொழித்திறன் பயிற்சி வகுப்பு
திரு. து. பிரபாகரன்
(B A, PG Dip-In -public Admn.)
ஆரம்பம்: 06-09-97 பி.ப. 4-00 மணி

**DIRECTOR**
**THE COLLEGE OF ARTS AND SCIENCE**
பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்தி.

(49389)

## ஏல விற்பனை

சங்கானை மீன் சந்தைக்கு அருகாமையிலுள்ள அமரர் நா. செல்லையாவின் தேவி அரிவு தொழிற்சாலையில் உள்ள றோதை வாளும், கொட்டகைகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
கனகர் பாலசிங்கம்,
சங்கானை மேற்கு,
மாலியவத்தை.

13-09-97 சனிக்கிழமை பகல் 12 மணிக்கு வைப்புப் பணம் ரூபா1000 செலுத்தி ஏலத்தில் கலந்துகொள்ளலாம்.

(49410)

## கல்வி உயர் கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர் தொழில்நுட்ப நிறுவனம் யாழ்ப்பாணம்.

### பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நூலகர் [தற்காலிகம்]
   - (அ) நூலக விஞ்ஞானம் ஒரு பாடமாகக் கொண்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்,
     அல்லது
   - (ஆ) பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் இலங்கை நூலகச்சங்கத்தின் முதல்/இடை நிலைப் பரீட்சையில் சித்தி.
2. நூலக உதவியாளர் [தற்காலிகம்]
   - (அ) க. பொ. த. (உயர்தரம்) சித்தியுடன் இலங்கை நூலக சங்கத்தின் முதல் நிலைப் பரீட்சையில் சித்தி.
   - (ஆ) வயது 18—45.
3. தற்காலிக எழுதுவினைஞர், தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர்
   - (அ) க. பொ. த. (சாதாரணம்) 6 பாடங்களில் சித்தி. கணிதம், தமிழ், ஆங்கிலம் திறமைச் சித்தி.
   - (ஆ) தொழில் நுட்பக்கல்லூரியில் வணிகதுறை போதனைகளில் பயின்று பயிற்சி பெற்றவர்கட்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
   - (இ) வயது 18—45 க்கும்இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
   - (ஈ) தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர் தகைமையும், முன் அனுபவமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

சுய விவரங்களுடன் **15-09-1997** - க்கு முன் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்குக.

நன்றி!

[சி/1459]

## நல்லூர் மகா விஷ்ணு ஆலயத்தின் கட்டட நிதிக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் அதிர்ஷ்ட எண்கள் வருமாறு

1 ஆம் பரிசுக்கான இலக்கம் — 09426
2 ஆம் ,, ,, — 09203
3 ஆம் ,, ,, — 03472
4 ஆம் ,, ,, — 03940
மற்றும் 3 ஆறுதல் பரிசுக்கான இலக்கம்
**06554, 04745, 03980**

ஆலய பரிபாலன சபையினர்
இல. 157, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(49404)

## SPOKEN ENGLISH

**By: BRITTO**
புதிய பிரிவு
06—09 97
(11 மணி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(47411)

உ
அம்பாள் துணை





அல்வாய் மாலை சந்தை

## ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம்

**நாள்: 04-09-1997 வியாழக்கிழமை**

ஸ்ரீ காமாட்சி அம்பாளுக்கு
நிகழும் ஈசுர வருஷ ஆவணி மாதம் 19 ஆம் நாள்
(04-09-97) வியாழக்கிழமை காலை 7-02 — 8-48 வரையுள்ள
துதியை திதியும், அத்த நட்ஷத்திரமும் கூடிய கன்னி லக்கின சுபமுகூர்த்தவேளையில்
கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் (03-09-1997) புதன்கிழமை காலை பூர்வாங்கக்கிரியைகள் ஆரம்பமாகும்.

பிரதிஷ்டா குரு: ''கிரியா கலாப முத்தாமணி'' சபா, தேவராஜக்குருக்கள்
மக்கள இசை:- L. S. ஜெகநாதன் குழுவினர்,

- ஆலய பரிபாலனசபை

### இவ்விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:

★ **வீனோ நகைப்பூங்கா**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ **சோபனா ஆடை அகம்**
16, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

★ **ஜனனி நகை மாளிகை**
மருதடி, பருத்தித்துறை.

★ **ஜெயா நகை**
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

## 41 வருட சேவையின் பின் ஓய்வு பெறும் பெண்தாதி உத்தியோகத்தர்



**திருமதி தனலட்சுமி ஜோன் தம்பையா**
(STAFF NURSING OFFICER)

04-09-97 இல் ஓய்வு பெறும் அன்னார் நலமுடன் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**மு. எசக்கியேல்,**
(ஊழியர்)
**ஆதார வைத்தியசாலை,**
**பருத்தித்துறை.**

(சி/1467)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவையூர் அருள்மிகு மஞ்சள் உனா
# ஸ்ரீ நகுலஞான வைரவப் பெருமான் ஆலய
# புதுத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்பிதழ்

05-09-1997

## வாழ்த்து வணக்க அட்டகம்

உலகில் உயர்ந்த தனிமுதலாம் ஒருவன் இருவர் மூவரெனப்
பலவும் படைத்துக் காத்தழிக்கும் பண்பன் சிவமாம் தனிப்பெயரோன்
அலகில் அருளால் அரிபிரமர் அகந்தை நீங்கி அறிவுறவே
நிலவும் சோதி யாம்உருவாய் அதனுள் தோன்ற அருள்புரிந்தோன்
ஆபத் தகற்றி ஏற்றமருள் அன்னை சாமுண் டேசுவரி
வாமத் துறவே வாழ்தருவோன் வள்ளல் தலங்கள் காத்திருக்கும்
சேமத் துணைவன் வைரவராம் திருநா மத்தோன் ஜெயதேவன்
பாபத் தளைவிட் டுயர்பதத்தில் ஏற்றும் பரமன் பதம்பணிவாம்.
சீரார் ஈழ வளநாட்டின் திருமா முகமாம் யாழ்ப்பாணத்(து)
ஏரார் நெற்றித் திலகமென இலங்கும் புதுவை மாநகரில்
பாரார் வடமேல் பால்திசையில் பழைமை புதுமை பயில்சிறப்பார்
ஊராம் ஏரந் தனைஎன்றும் உயர்ந்து வளரும் வளமுளதே.
மாயன் காக்கும் வனவளத்தால் மலரும் மற்றப் பதிவாழ்வோர்
நேயம் மிகவே நிதம் போற்றும் நியமத் தருளோ நிறையவுறும்
சேயங் கொருவன் நகுலேசச் செம்மல் சிந்தைத் தியானத்தில்
போயங் கிருந்து புறம் பொழியும் கருணை புவனம் தோற்றவரும்.
மங்க ளஞ்சேர் மஞ்சள்நுனா நீழல் மகிழ்ந்து வணங்குபவர்
தங்க ளங்கம் நீக்கியவர் தலைப்பட் டுயர அருள்தருவான்
நங்க ளப்பன் நகுலேசு வரன்பால் நனவு கனவிலெலாம்
எங்க ளிடர்தீர்த் தருளுமுறை இயம்பு வித்தே எமைஇயக்கி
அழகார் கோயில் ஆக்குவித்தே கும்பாபி டேகத் தருளுருவாய்
விழவார் மூர்த்தி எனமேவி விநோதம் பலவும் காட்டியபின்
எழிலார் புதுத்தேர் இயற்றுவித்தாய்ஏறி ஏரார் திருவீதி
வழியே உலாவந் தெம்வாழ்வில் ஒளியே மலர வரந்தருவாய்.
வரதா, வளரும் மதியோடு வானும் போற்றும் வரநதிசேர்
சிரசா, நன்றி மறவாத சிரத்தை யுடன்காத் துறுளுமலிப்
பிரதா னமுறும் வாகனனே, பிரமன் அரிதாள் பெருமான் நின்
சரணா லயமே சரணானோம் தயையோ டெம்முன் சார்ந்தருளே.
வாழி வணக்கம் மஞ்சள்நுனா, மருங்கில் அமர்வை ரவர்வாழி
வாழி அடியார் பாங்கில்வாழ் மக்கள் மலியும் வளம்வாழி,
வாழி ஏரந் தனைபுதுவை, நாளும்பூசை விழாவாழி
வாழி ஈழம் தமிழ் மாந்தர், வாழி சிவம்நன் மங்களமே.

பண்டிதர் ச. சுப்பிரமணியம்,
சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர்.

## ஆன்மீக எழுச்சியின் வடிவமாய் அழகுற அமைந்த தேர்

இயற்கையின் இனிய வளங்களையும், இயல்புக்கு மாறாக அற்புதப் பேறாக, வற்றாத வாவியையும் கொடையாகப் பெற்றும், பெரும் நிலப்பரப்பினை உள்ளடக்கிக் கொண்டும் பசுமையுடன் பரந்து விரிந்து விளங்கும் கிராமம் புத்தூர். ஆன்மீக வளர்ச்சிக்குத் திறவுகோலாக எண்ணிறைந்த கோயில்களையும், அறிவுவளர்ச்சிக்கு ஊன்றுகோலாக எண்ணிலா கல்விச்சாலைகளையும் நீண்ட நெடுங்காலமாகக் கொண்டிருக்கும் பெருமை இவ்வூரின் தனிச்சிறப்பாகும். இத்தன்மையினால் வரலாற்றில் உயிர்ப்பானதொரு ஊராக இவ்வூர் இடம்பெறுகிறது. இந்துமதத்திற்கும், இனிய தமிழுக்கும், செழுமையினையும், சிறப்பினையும் ஊட்டிய வண்ணமாக இவ்வூர்மக்கள் இருந்து வருகின்றனர்.

வரலாற்றுச் சிறப்பினையுடைய புத்தூர், போரின் விளைவால் இன்று அழிவின் அடையாள அணிவகுப்புக் காட்சி போல் காணப்பெறினும், இங்கு வாழும் மக்களின் ஆன்ம பலமும், உறுதியும் உருக்குலைந்து விடவில்லை.

இங்கு வதியும் மக்களுடன் ஒன்றித்து விட்டது, இந்த ஒன்றிப்பின் விளைவுகளில் ஒன்றுதான் ஏரந்தனையில் எழுந்தருளியிருக்கும் மஞ்சவுனா ஸ்ரீ நகுலஞானவைரவப் பெருமானின் திரு உலாவுக்காக உருவாக்கப்பட்ட தேர். உடல் உழைப்பினதும், சமூகப் பிரக்ஞையினதும், ஆன்மீக எழுச்சியினதும் வடிவமாக வடிவமைந்தது 'இத்தேர்'

ஏர்பூட்டி விதை விதைக்கும் சமூகம் அழிவுகளுக்குப் பின்னைய மிகக் குறுகிய காலத்தில் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு, இறைவனின் திருவுலாவுக்குத் தேர் செய்தமை அனைவரையும் சிந்திக்கவும் பாராட்டவும் செய்கிறது.

பணிகள் தொடர வாழ்த்துக்கள்.
இறை பாதம் பணிந்து நிற்போமாக!

க. சிவானந்தமூர்த்தி,
முது நிலை விரிவுரையாளர்,
மெய்யியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## இறை நம்பிக்கை மட்டுமே வாழ்விலும், தாழ்விலும் உறுதுணை

இந்துக் கலாசாரத்தின் உயிர்நாடியாக விளங்குபவை திருக்கோயில்கள். இதனாற்றான் ''கோயிலில்லா ஊரில்குடியிருக்க வேண்டாம்'' என்றார் ஔவைப்பிராட்டியார். கோயில்கள் நிறைந்த புத்தூர் என்னும் புனிதப்பதியில் கோயில் கொண்டுள்ள ஏரந்தனை அருள்மிகு மஞ்சவுனா ஸ்ரீ நகுலஞான வைரவப் பெருமானுக்கு சிவனடியார்கள் தேரொன்றினைச் செய்வித்து திருவுலாவுக்கு வழி செய்தமையை வாழ்த்துகிறேன்.

இன்னல்கள் நிறைந்த இந்தக்காலக்கட்டத்திலும், ஆன்மீக வலுவுடன் இறைபணியைத் தொடர்ந்து கொண்டிருப்பதையும், இறைபணியாற்ற முனைந்து கொண்டிருப்பதையும் பாராட்டாமல் இருக்க முடியாது. வாழ்விலும், தாழ்விலும் உறுதுணையாக நிற்பது இறைநம்பிக்கையே.

''அவனருளாலே அவன் தாள் பணிவோம்'' சைவப்பணிகள் தொடரட்டும். சமயநம்பிக்கைகளை ஊட்டுகிற உறைவிடங்களாக கோயில்கள் விளங்கட்டும்.

த, விசுவலிங்கம்
அறங்காவலர்
புத்தூர் அருள்மிகு
ஸ்ரீ விசாலாட்சி உடனமர் ஸ்ரீவிஸ்வநாதர் சுவாமி
தேவஸ்தானம், புத்தூர்.

(சி/1458)

துர்க்கா தேவியின்
திருவருளோடும்
சிவத்தமிழ்ச் செல்வியின்
ஆசியுடனும்
வெள்ளோட்டம்
நடைபெறும்.

### தேரின் ஸ்தபதி



விஸ்வப்பிரம்மஸ்ரீ
**செல்லையா பாலச்சந்திரன்**
புத்தூர் ஸ்ரீ காளிதா
சிற்பாலயத்தைச்
சேர்ந்த
ஸ்தபதி அவர்கள்
நாளைய தேர்
வெள்ளோட்ட
விழாவில்
தங்க விருது வழங்கி
கௌரவிக்கப்படுகிறார்

## கிராம அலுவலரின் ஆசி

மஞ்சள் உனா ஸ்ரீ நகுல ஞானவைரவப் பெருமான் புத்தூர் வாழ் மக்களுக்குக் காவற் தெய்வமாய் இருந்து கருணை புரிந்து வருகிறார். சிவவடிவங்களுள் ஒன்றாகவும், சிவபிரானது புத்திரராகவும் குறிப்பிடப்படும் வைரவர் தீய சக்திகளை ஒடுக்கி நல்லோரைக் காப்பவர்.

மஞ்சள் உனா வைரவரது ஆலயமும் அங்கு நடைபெறும் விழாக்களும் படிப்படியாக வளம் பெற்றோங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதே. அந்த வகையில் புதிய சித்திரத் தேரொன்று எம்பெருமானுக்கு உருவாகி வெள்ளோட்டம் நிகழ்வது சாலச் சிறந்த ஒருவிடயமாகும்.

இச்சிறப்பினை என்றும் நினைவுகூரும் வகையில் ஒரு மலர் வெளிவருவதும் பொருத்தமானதே. இவ்விழா சிறப்புற்றோங்கவும், மலர் சிறந்து விளங்கவும், எல்லா மக்களும், சகல நலமும் பெற்று மகிழ்ந்து வாழவும் அருள்புரியும்படி எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமான் பாதாரவிந்தங்களை வந்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

நாம் எல்லோரும் இடம் பெயர்ந்து போய் பல மாதங்களுக்குப் பின்பு திரும்பி வந்தோம் என்பது எல்லோரும் அறிந்ததே. இந்த இக்கட்டான நிலையிலும் கூட இவ்வூர் மக்கள் தங்களின் சரீர உதவிகளினாலும், பணம், பொருள் உதவிகளினாலும் மிக விரைவாக மஞ்சள் உனா ஸ்ரீ நகுல ஞான வைரவப் பெருமானுக்கு கட்டடத்திருப்பணி, தேர்த் திருப்பணி வேலைகளைச் செய்து முடித்திருப்பதென்பது ஒரு வியக்கத்தக்க, போற்றத்தக்க விடயமாகும்.

க. இராசதுரை.
(கிராம உத்தியோகத்தர்)

**5-9-97 காலை 6.45 மணி முதல் 8.45 மணிக்கு இடையில் வெள்ளோட்டம் நடைபெறும்.**

## அறமென்னும் பாதையில் நடக்கும் அடியவரின் ஆசையின் வடிவம்

இலங்கையின் வடபால் செழுமையும் தெய்வீகமும் நிறைந்த யாழ்ப்பாணநன்நகரில் புதுவையூர் என்னும் சிறப்புற விளங்கும் ஏரந்தனை என்ற புனிதபூமி (புத்தூர் வடக்கு) தனிலே மஞ்சள் உனா என்னும் தங்க விருட்சமதில் வீற்றிருந்து தொழுவார் துயர் நீக்கி காத்து அருள் புரியும் அருள்மிகு மஞ்சள் உனா ஸ்ரீ நகுல ஞானவைரவப் பெருமான் சிறப்பு மிகு சித்திரத் தேரில் அருட் பவனி வரத் திருவுளங் கொண்டார். அவரது ஆசையை அடியார்கள் நிறைவேற்றுமுகமாக யாவரும் சேர்ந்து பொருள் ஈந்து பேருதவி புரிந்து எம்பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் அமைத்தார்கள். பெருமானின் அடியவர்களின் ஆசையின் வடிவாக விளங்கும் இவ்வினிய தேரின் வெள்ளோட்ட வைபவம் 05-08-97 வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்ற மாணிக்கவாசகரது வாக்கினைப் போல எம்பெருமானின் திருவருளால் நாம் இத்தேரினை உருவாக்கியுள்ளோம். தூய அருளே வடிவான இறைவன் தனது அடியார்களின் விழிநீர் துடைத்திடவே எங்கும் வியாபித்துள்ளான். அடியார்கள் நெஞ்சங்களில் அஞ்சுமுகம் தோன்றில் மஞ்சள் உனான் தோற்றிடுவான். பழம் பெருமை கொண்ட இவ்வாலயம் இன்று புதுப் பொலிவுடன் தோன்றிடவும் குடத்துள் விளக்காய் இருந்து இன்று குன்றில் இட்டதீபம் போல் எங்கும் அருள் ஒளிவீசவும், எம்பெருமானின் திருவருளே காரணமாகும். மூவாசை, மும்மலங்கள் போன்ற தளைகளால் கட்டுண்டு அஞ்ஞான இருளில் சிக்குண்டு தவித்த நாம் அருளவனாம் மஞ்சள் உனா ஸ்ரீ நகுலஞான வைரவனின் அருள் ஒளியிலே எம்மை சுதாகரித்துக் கொண்டோம். அறமென்னும் பாதையில் நடந்து அருளவனின் பதங்களைநாட வேண்டும்.

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்
கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என்று வள்ளுவர் பெருமான் கூறியது போல் நாம் எமது துன்பத்தை துடைத்துவிட வேண்டுமானால் இறைவனையே நாடவேண்டும். இல்லையேல் நாம் துன்பங்களில் இருந்து விடுபடமுடியாது. எம்பெருமானுக்கு சித்திரத்தேர் உருவாக்க பொருளீந்து பேர்உதவி புரிந்த அடியார்களுக்கும். அழகியதேரினை நிர்மாணித்து உதவிய விஸ்வப் பிரம்மஸ்ரீ செல்லையா பாலச்சந்திரன் (ஸ்ரீ காளிகா சிற்பாலயம் புத்தூர் கிழக்கு) அவர்களுக்கும், எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று சகல சௌபாக்கியத்துடனும் வாழ்வாங்கு வாழ அருள் வேண்டி அருள்மிகு மஞ்சள் உனா ஸ்ரீ நகுல ஞானவைரவப் பெருமானின் பாதங்களில் பணிவோமாக.

செ, நகுலேஸ்வரன்
புதுவையூர்
மஞ்சள் உனா ஸ்ரீ நகுல ஞானவைரவர் தேவஸ்தானம்
புத்தூர் வடக்கு, ''ஏரந்தனை''

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்;
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்பு உண்டேல், உனை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது, உன் அடியின் கீழ் இருக்க என்றார்.
- சேக்கிழார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையெழுத்து சஞ்சிகைப் போட்டி

## மாணவரிடையே நடத்த ஏற்பாடு

வலிகாமம் தெற்கு, செப். 4

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு இவ்வருடம் கலை, இலக்கிய விழா ஒன்றை நடத்தவுள்ளது.

இதனை முன்னிட்டு இவ்வாண்டு பாடசாலை மாணவரிடையே கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி ஒன்றினையும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினூடாக நடத்த மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே கலை, இலக்கிய ஆர்வம், ஆக்கத்திறன் ஆற்றல், கூட்டு முயற்சி, குழுமுறைக் கற்றல், தொடர்பாடல் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதே போட்டியின் நோக்கமாக அமையும்.

மிகச் சிறந்த முதல் மூன்று கையெழுத்துச் சஞ்சிகைகளுக்கும் கோட்ட, மாவட்ட, மாகாண மட்டங்களில் மதிப்பீடு செய்து பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

பாடசாலை மட்டத்தில் ஒக்ரோபர் 24 ஆம் திகதியும், கோட்ட, வலய மாகாண மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் நவம்பர் 7 ஆம், 21 ஆம், 28 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி அறிவித்துள்ளார். (ஐ-152)

# கடற்றொழில் அலுவலகத்தில் போதிய ஊழியர்கள் இல்லை

யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலகத்தில் கடமையாற்ற போதியளவு ஊழியர்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது,

வாகன சாரதி இல்லாத காரணத்தால் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரியே வாகனத்தை ஓட்டிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி அலுவலகத்தில் எட்டு எழுதுநர்கள் பணியாற்ற வேண்டிய இடத்தில் ஐந்து பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர் என்றும்—

இதுதவிர தட்டெழுத்தாளர் மற்றும் காவலாளிகள் வெற்றிடங்களும் நிரப்பப்படாமலேயே உள்ளன என்றும் – தெரிவிக்கப்படுகின்றது.

## தளபாட கொள்வனவுக்கு நிதி உதவி

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சன சமூக நிலையத்திற்கு புதிய தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டு திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச செயலகம் 75 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (ஐ-135)

## பாலர் விளையாட்டுப் போட்டி

வலிகாமம் தெற்கு, செப். 4

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் நடத்தப்பட்டு வரும் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவு மைதானத்தில் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ. இலகுநாதன் தலைமையில் நடைபெறும். வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## பற்சிகிச்சைப் பிரிவு

விடுமுறையில் கொழும்பு சென்றிருந்த சாவகச்சேரி ஆஸ்பத்திரி பற்சிகிச்சை நிபுணர் மீண்டும் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளதால் ஆஸ்பத்திரி பற்சிகிச்சைப் பிரிவு வழமைபோல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

# சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாட்சி தோட்டம் கற்பகப் பிள்ளையார் கோயிலின் அலங்கார உற்சவம் இறுதி நாளான நாளை வெள்ளிக்கிழமை, ஆவணிச் சதுர்த்தியை ஒட்டி விசேட அபிஷேக ஆராதனைகளும், இரவு திருவூஞ்சலும் இடம் பெறும். மறுநாள் வைரவர் பொங்கலும் ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகமும் நடைபெறும்.

★ ★ ★

சாவகச்சேரி ஸ்ரீதுர்க்கா தேவி கோயிலின் மஹாகும்பாபிஷேக விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 6.52 மணிமுதல் நடைபெறும்.

★ ★ ★

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயிலின் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6.41 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

★ ★ ★

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் விசேட பூசைகள் நடைபெற்று விநாயகர் வீதியுலா இடம்பெறும்.

★ ★ ★

வண்ணை மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலய வருடாந்தஅலங்கார உற்சவம் நாளைவெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

★ ★ ★

சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய சதுர்த்தித் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை விசேட அபிஷேக ஆராதனையுடன் நடைபெறும்.

அன்றைய தினம்நாட்டில் சமாதானம் வேண்டிசுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்திலிருந்து ஆலயம் வரை பாற்காவடி இடம் பெறும். (ஐ-15)

★ ★ ★

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் கோயில் அலங்கார உற்சவம் கடந்த மாதம் 27 ஆம்திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. உற்சவத்தின் இறுதி நாளான நாளை வெள்ளிக்கிழமை மாலை சுவாமி வீதியுலா இடம் பெறும். (ஐ)

★ ★ ★

கந்தரோடை வற்றாக்கை ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வநாத சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கும் 8 மணிக்கும் இடையில் நடைபெறும்.

இன்று வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

மயிலணி சிவஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ-152)


மங்களகரமான திறப்பு விழா

சோபனா ஆடை அகம்





இன்று காலை 7 — 05 மணிமுதல் 8 — 45 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்
எமது ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்களும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
நலன்கருதி மீண்டும் யாழ். நகரில் புதுப்பொலிவுடன்
இன்று முதல் ஆரம்பமாகின்றது

சோபனா ஆடை அகம்

உங்களுக்குத் தேவையான சகல விதமான புடைவைகளையும், றெடிமேற் ஆடைகளையும் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய நீங்கள் இன்றே நாட வேண்டிய ஒரே இடம்:

சோபனா ஆடை அகம்

உங்கள் நல்வரவை நாடும்:

சடாட்சரம் மகிந்தன்,
16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

ஸீனோ நகைப்பூங்கா,
185, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

(சி-1465)

இன்னும் இரண்டு நாள்களே உள்ளன!

★ 5 வயதுக்குக் குறைந்த சகல குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து
★ போலியோ என்னும் பொல்லாத வியாதியிலிருந்து காக்க அது அவசியம்
★ யாழ். குடாநாடு முழுவதிலும் உள்ள விசேட நிலையங்களில்

PolioPlus

நாளை மறுதினம்
சனிக்கிழமை 6 ஆம் திகதியை
ஞாபகத்தில் வைத்திருங்கள், பெற்றோர்களே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அச்சமா அவருக்கு?

போரினூடாகச் சமாதானத்தைக் காணுவது.

நீண்ட காலப் பிரச்சினையான இன விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, ஜனாதிபதி சந்திரிகா இந்தப் புதிய ''கோட்பாட்டையே'' கைக்கொண்டுள்ளார்.

ஒரு புறத்தில் போரை நடத்தி தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது அல்லது பலவீனப்படுத்துவது. அதன் பின்னர் அரசு விதிக்கும் நிபந்தனைகளுடன் அவர்களுடன் பேசுவது; அப்போது அரசின் கைவசம் உள்ள தீர்வுப் பொதியை ஏற்குமாறு நிர்ப்பந்திப்பது.

இப்படி ஒரு கணக்கை வகுத்து — அது எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது என்பது குறித்து அக்கறைப்படாமல் — மறுபுறத்தில் ஏனைய சாராருடன் பேசி அவர்களின் ஒத்துழைப்புடன் அரசியல் தீர்வைக் காண்பது என்பதுவே அண்மைக் காலம் வரை அரசின் திட்டமாக இருந்தது.

ஜனநாயக வழியில் ஏனைய தரப்புகளுடன் பேசி, தீர்வுப் பொதியை நிறைவேற்ற அவர்களின் ஆதரவைப் பெறுவது கடினம் என்று அரசு இப்போது உணர்ந்திருக்கிறது. அதனால் பொதியை மக்கள் முன்வைத்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, அதனை அமுல் செய்வது. வாக்கெடுப்பில் தோற்றால் நாடாளுமன்றத்தைக்கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவது அல்லது பழைய அரசமைப்பைத் தூக்கி எறிந்துவிட்டு அரசின் சொந்தத் தீர்வுத் திட்டத்தை ஒருதலைப்பட்சமாக நடைமுறைக்குக் கொண்டு வருவது.

இதுவே அரசின் இன்றைய மாற்றீட்டு நிலைப்பாடாகியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இவ்வாறு செய்து விடுவாரோ என்ற அச்சம் எல்லோரையும் முந்திக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு உண்டாகியிருக்க வேண்டும்.

அதனால் அவர், அரசின் தீர்வுத் திட்டம் நிறைவேறினாலும் போர் முடிவுக்கு வரமாட்டாது என்று இப்போது கூறுகிறார்.

போரினால் தமிழ்மக்கள் அழிகின்றார்கள்; அகதிகளாகின்றார்கள்; அவலப்படுகிறார்கள். அவர்கள் மட்டுமின்றி முழு நாடுமே பல வகைகளாலும் சீரழிகிறது. ஆகையால் போரை நிறுத்துவதற்கே முதலில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் அரசு அதனை நிறுத்துவதற்கு முயற்சி எடுக்கவில்லை. போரினூடு சமாதானம் ''கோட்பாடு'' இதற்கு இடந்தர மாட்டாது அல்லவா......?

எதிர்க்கட்சித் தலைவருக்கு நாட்டின் மீதும், மக்கள் மீதும் அக்கறை இருந்திருப்பின், போரை நிறுத்துமாறும் அதன் பின்னர் அரசியல் தீர்வுக்கு முயற்சிக்கலாம் என்றும் அரசிடம் எப்போதோ கோரியிருக்கலாம்; கூறியிருக்கலாம். தீர்வுப் பொதிக்கு ஆதரவு வழங்குவதற்கு அதனை ஒரு நிபந்தனையாக்கி அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்கலாம். ஆனால்...

போர் நடந்து கொண்டிருக்கும் போதே புலிகளுடன் பேசலாம் என்று சொன்னாரே தவிர போரை நிறுத்தக் கோரியதில்லை. அது சரிவர நடக்கவில்லை என்று குற்றம் காணவே முனைந்தார்.

இப்போது போரை முடிவுக்குக் கொண்டு வருவது எப்படி என்பதனை வெளியிட வேண்டும் என்று அவர் அரசிடம் கேட்பது வெறும் அரசியல் விதண்டாவாதமே அன்றி வேறு என்ன?

# 2½ லட்சம் முஸ்லிம் மக்களுக்கு கிழக்கில்தனியான அலகுதேவையா?

## எதிர்ப்புக் கூட்டங்களை நடத்த பௌசி முடிவு

கொழும்பு, செப். 4

''இலங்கையில் 17 லட்சம் முஸ்லிம் மக்கள் வாழும் போது இரண்டரை லட்சம் முஸ்லிம் மக்கள் வாழும் கிழக்கில் தனி அலகு தேவையா? கிழக்கில் தனி அலகு கோருவதை எதிர்த்து அடுத்த மாதத்தில் நாடு முழுவதும் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்போகிறோம்'',

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த தேர்தல்களில் 75 சதவீதமான முஸ்லிம் மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மூலமே அரசுக்கு வாக்களித்தனர். முஸ்லிம் காங்கிரஸ் மூலமாகவல்ல. முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் வாக்கு வங்கி என நினைப்பது தவறானது,

கிழக்கு மாகாணம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் கதைக்கலாம். ஆனால் நாட்டில் உள்ள முஸ்லிம் மக்களுக்காக கதைக்க முடியாது.

1977ஆம் ஆண்டு தனிநாடு கோரும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் அஷ்ரப் கையொப்பம் இட்டது முஸ்லிம் மக்கள் சார்பாகவல்ல. தமிழ் மக்கள் சார்பாக கையொப்பம் இட்டதாகவே கருத வேண்டும்.

முஸ்லிம் மக்கள் மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்து முஸ்லிம் மக்கள் தமது துரோகிகள் எனத் தமிழ் மக்கள் நினைப்பதற்கு காரணகர்த்தாக்கள் அஷ்ரப் போன்ற அரசியல்வாதிகளே,

கிழக்கில் தனி அலகு முஸ்லிம்களுக்கு உருவாகுவதை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்ந்த முஸ்லிம்கள் எதிர்க்கிறார்கள். அஷ்ரப்பின் ஆதரவில் அரசு நம்பியிருப்பதாகக் கூறமுடியாது. அப்படி நினைப்பதும் தவறாகும்.

ஒரு விவகாரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வாக்களித்தபோதும் அரசு 23 வாக்குகளைப் பெரும்பான்மையாகப் பெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தனி அலகுக்கு எதிராகப் போராட சுதந்திரக்கட்சி முஸ்லிம்கள் முடிவு செய்துள்ளனர். அடுத்த மாதம் ஜனாதிபதியுடனும், அமைச்சர் பீரிஸ் உடனும் இது குறித்துப் பேசவிருக்கிறோம். 15 ஆயிரம் முஸ்லிம்களைத் திரட்டி ஜனாதிபதியுடன் பேச வைக்கப் போகிறேன்.

முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு வழங்குவதற்கு எதிராக அடுத்த மாதம் முதல் கூட்டங்களை நடத்த விருக்கிறோம். முதலாவது கூட்டம் கொழும்பில் நடைபெறும். அதில் ஜனாதிபதியும் பங்குபற்றுவார். இப்படி அவர் கூறினார்.

(இ-150-3)

# மன்னிப்புச்சபையுடனான சந்திப்பு: ஜனாதிபதி இறுதி நேரத்தில் ரத்து

கொழும்பு, செப். 4

ஜனாதிபதி சர்வதேச மன்னிப்புச்சபையின் பிரதிநிதிகளை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இறுதி நேரத்தில் ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் சந்திப்பை ஜனாதிபதி ரத்துச் செய்தார் என்று யுத்திக பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஐக்கிய தேசியக்கட்சியின் 17 வருட ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கைவிட்ட சந்தர்ப்பங்களில் அந்த அறிக்கைகள் குறித்து கவனம் எடுக்காது, சர்வதேச மன்னிப்புச்சபை கம்யூனிஸ்ட் வாதிகளின் அமைப்பு என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா தெரிவித்து வந்தார்.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா அப்போது சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆ நண்பராக விளங்கியதுடன் அந்தச் சபையின் அறிக்கைகளுக்கு மதிப்பளித்து வந்தார்.

ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறி உள்ளது.

கடந்த மாதம் இலங்கை வந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து நிலைமைகளைக் கண்டறிந்தனர்.

மகசின் சிறைச்சாலைக்கும் சென்று அங்கு நிலைமைகளை அவதானித்தனர்.

இக்குழுவினர் ஆள்கள் காணாமற் போவது, சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்படும் மரண தண்டனைகள் மற்றும் சித்திரவதைகள் குறித்து கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக கடந்த மாதம் 22ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்திப்பதாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர் இந்தப் பிரதிநிதிகள் தென் பகுதியில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக் குழுவின் தலைவரான சட்டத்தரணி மனோரி முத்தெட்டுகமவின் பணிமனையில் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஜனாதிபதியின் பணிமனையில் இருந்து அங்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமல் ஜனாதிபதியுடனான சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

இப்படி தெரிவிக்கப்பட்டது.

## பிரிகேடியர் பதவி நீக்கம்

கொழும்பு, செப். 4

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் பிரிகேடியர் ஹரி லியனகே நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்,

கொழும்பு இராணுவ தலைமையகத்தில் பணியாற்றி வந்த இவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகரா நியமிக்கப்பட்டுள்ளார். (இ-21-3)

## கப்பல் பழுது

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிய ''அஸ்ரோறியா'' என்ற கப்பலில், சிறு பழுது ஏற்பட்டதால் இங்கிருந்து பொருள்களை ஏற்றாமல் அக்கப்பல் கடந்த ஞாயிறு கொழும்பு புறப்பட்டது.

இக் கப்பலில் அனுப்புவதற்காக வெங்காயம், கடலட்டை, புழுக்கொடியல் போன்றவை தயார் நிலையில் இருந்தும் இறுதி நேரத்தில் அவை இக் கப்பலில் ஏற்றப்படவில்லை. (இ-109)

## பட்டலந்த ஆணைக்குழு முன் ரணில் சாட்சியம்

கொழும்பு, செப். 4

ஐ. தே. க. தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பட்டலந்த ஆணைக்குழு முன்பாக நேற்றுச் சாட்சியம் அளித்தார்.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் தமக்கு வீடு ஒன்று இருந்ததாகவும்—

தாம் அடிக்கடி அங்கு சென்று வருவதாகவும்—சாட்சியத்தில் அவர் தெரிவித்தார்.

விசாரணையின் போது ஏராளமான ஐ.தே.க. சார்பு சட்டத்தரணிகளும், முன்னாள் அமைச்சர்களும் சமுகமளித்திருந்தனர். (இ-3)

## நிதி வசதி உடைய 3 மாகாணங்களில் மட்டும் உடன் ஆசிரியர் நியமனம்

கொழும்பு, செப். 4

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

எனினும் மேல் மாகாணம், வடக்கு—கிழக்கு மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணம் ஆகியவற்றில் அப் பரீட்சைக்குத் தோற்றியவர்களிலிருந்து தெரிவு செய்து ஆசிரியர் நியமனங்களை வழங்குவது என அரசு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1995 பெப்ரவரி மாதம் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. இப் பரீட்சை நடந்து இரண்டரை ஆண்டுகளாகியும் அதன் முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்தப் பரீட்சையில், ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் இளைஞர்களும் யுவதிகளும் தோற்றியிருந்தனர்.

தங்கள் மாகாணங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பி சம்பளம் வழங்கப் போதுமான நிதி தம்மிடம் உண்டு என மேல்மாகாண சபை, வடக்கு — கிழக்கு மாகாண சபை மற்றும் வட மத்திய மாகாணசபை ஆகியன அரசுக்குத் தெரிவித்ததை அடுத்தே அந்த மாகாணங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப அரசு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## மாணவருக்கு லயன்ஸ் உதவி

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த இருபது மாணவர்களுக்கு பாடசாலை கற்பித்தல் உபகரணங்கள் அல்லது சீருடைகள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்படவுள்ளன.

பாடசாலையில் நடைபெற்ற முதலாம், இரண்டாம் தவணைப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளதாக கழகச் செயலாளர் எம். கே. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

## சாயி சிந்தனை

சத்தியத்தைத் தேடுவது உங்கள் நித்திய சாதனையாக வேண்டும். ஒவ்வொரு நொடியும் இந்த முதற் கடமைக்கே பயன்படுத்தப்பட வேண்டும்.

புத்தியானது தவத்தினால் சுத்திகரிக்கப்படும் போதுதான் சத்தியம் அதிலே பிரதிபலிக்கின்றது. உயர்ந்த உள்நோக்கோடு செய்யப்படும் செயல்கள் அனைத்தும், அதாவது ஆன்ம நாட்டத்தைக் குறிக்கும் செயல்கள் அனைத்தும் தவம் எனப்படும். முன் செய்த மூடத் தவறுகளுக்காக வருந்துதல், திட சித்தத்தோடு நற்பண்புகளை விடாது கடைப்பிடித்தல், தன்னடக்கம், வெற்றி தோல்விகளில் உறுதிதளராத சமநிலை—இவையும் அவற்றுள் அடங்கும். தவமானது புலனிச்சைகளைத் துறத்தலும், கட்டுப்பாட்டைப் போற்றி வளர்த்தலுமாகும்.

தற்காலத்தில் வழி தவறுவதற்கு ஏதுவான சபலங்கள் பல உள்ளதால் கட்டுப்பாட்டு நெறி அவசியமாகின்றது. மனிதனின் மனம் இருளால் சூழப்படுகின்ற இந்த இரும்பு யுகத்தில், ஏறிச் செல்லும் படிக்கட்டுக்கு ஒளி தரும் எந்தச் சிறு விளக்கும் உவந்து ஏற்கப்பட வேண்டியதே! அதனாலேயே நான் நற்செயல்கள், நற்பழக்கங்கள், நற்பாங்குகள், நன்னிலைப்பாடு ஆகியவற்றை அறிவுறுத்துகின்றேன். அதன் பயனாக என்றும் நீங்கள் இறைவன் சன்னிதானத்தில் இருப்பவர்கள் ஆவீர்கள்.

உள்ளத்தை விழுமிய தாக்கும் உயர் வார்த்தைகளைச் செவியுறவும் (சிரவணம்), ஆத்மாவின் அறிவுறுத்தல்களான அம்மொழிகளை ஆழ்ந்து சிந்திக்கவும் (மனனம்), அவற்றின் தகைமை உணர்ந்து பூரண பயபக்தியோடு தியானிக்கவும் (நிதித்தியாசனம்) முயலவேண்டும். இது ஒன்றே உற்ற போதனையாகும். இது ஒன்றே நன்மை பயப்பதாகும். பிற நடவடிக்கைகளெல்லாம் இரண்டாம் பட்சமே.

ஆதாரம்:
Sathya Sai Speaks VOl V

## நாளை

**ஆவணி 20**

வெள்ளிக்கிழமை

**திதி:** திருதியை முற்பகல் 11.24 வரை.

**நட்சத்திரம்:** அத்தம் முற்பகல் 9.08 வரை.

விநாயக சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 6.04-7.34

ராகுகாலம்: 10.34-12.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிகளைச் சந்திக்க

# அங்கோலாவில் கிடைத்த வாய்ப்பு இலங்கையில் கிடைக்கவில்லை

கொழும்பு, செப். 4

''அங்கோலா நாட்டுக்கு நான் சென்ற சமயம் அங்கோலா நாட்டுக்கு எதிராக யுத்தம்புரியும் கிளர்ச்சியாளர்களைச் சந்தித்தேன். அதற்கான வாய்ப்பை அந்நாட்டு அரசாங்கம் ஏற்படுத்தித் தந்தது. அப்படியான சந்தர்ப்பம் இங்கு எனக்குக் கிட்டவில்லை.''

இப்படி மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக் குழு விசேட தொடர்பாளர் பார்க்வலி நிடியே தெரிவித்தார்.

## ஐ.நா. ஆணைக்குழு அதிகாரி கவலை

இலங்கைவிஜயத்தை முடித்துக் கொண்டு ஜெனிவாவுக்கு திரும்பும் போது கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்த மோதலில் ஈடுபடும் இரு தரப்பினரிலும் பார்க்க கூடுதலாகப் பொதுமக்களே இங்கு கொல்லப்படுகிறார்கள். யுத்தத்துக்கான வழிமுறைகள், சட்டதிட்டங்களை மோதலில் ஈடுபடுபவர்கள் கடைப்பிடித்தால் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படமாட்டார்கள்.

1996 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் 354 முதல் 650 பேர் வரை காணாமற் போயுள்ளனர் எனத் தகவல் கிடைத்தது. ஆனால் இவ்வாண்டு இந்த எண்ணிக்கை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

# தீர்வு யோசனைக்கு ஏனைய கட்சிகளின் ஆதரவும் தேவை

## கூட்டணித் தலைவர் சிவா

கொழும்பு, செப். 4

''அரசியல் தீர்வு யோசனைகளுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அரசாங்கம் பெற்றுக்கொள்ள ஏனைய அரசியல் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் இலங்கை வானொலிக்கு கருத்துத் தெரிவிக்கையில், தமது கட்சி இந்த யோசனைகளுக்கு பூரண ஆதரவளிக்கும் என்றார்.

அரசாங்கத்தின் யோசனைகளுக்கு ஏனைய அரசியல் கட்சிகளினதும் ஆதரவைப் பெற்றுக் கொள்ள நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த யோசனைகளுக்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் அரசாங்கம் பெற்றுக்கொள்ளத் தவறினால், யோசனைகளைக் கைவிடாமல், சர்வஜன வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக இதுவரை கருத்தொருமைப்பாடு ஏற்படவில்லை என்று தெரிவித்த அவர் வெகு விரைவில் அது ஏற்பட்டுவிடும் என்றார். (இ-5)

## ஓடுகள், கதவுகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பொதுமக்களின் வீடுகளில் உள்ள பொருள்களை—உதாரணமாக ஓடுகள், கதவுகள் ஜன்னல்கள் மற்றும் மரத்தளபாடங்களை — களவாடுதல், விற்பனை நிலையங்களில் அவற்றை விற்றல், அவற்றைக் கொள்வனவு செய்தல் ஆகிய சட்ட விரோதச் செயல்கள் குறித்த தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறான செயல்கள் சட்ட விரோதமானவை என்பதைத் தெரிவிப்பதுடன் இவற்றைக் களவாடுபவர்கள், கொள்வனவு செய்பவர்கள் ஆகியோருக்கு எதிராக பொலீஸார் நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளனர்.

எனவே மேற்குறிப்பிட்ட சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவ்வாறான பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டாம் எனவும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மேலும் இவ்வாறான சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மற்றும் களவாடப்பட்ட பொருள்கள் பற்றிய தகவல்களை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ இராணுவத்தினருக்கு அல்லது பொலீஸாருக்கு தந்து உதவுமாறு சட்டத்தை மதிக்கும் பொதுமக்களுக்கு தயவான வேண்டுகோள் விடப்படுகிறது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)


உ

''ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பிகை துணை''

**தொல்புரம் கொட்டியம்பதி**

அருள்மிகு

**ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள்**

**தேவஸ்தானம்**

**மஹா கும்பாபிஷேக விழா**

காலம்:- ஆவணி 20 ஆம் நாள் (05-09-97) வெள்ளிக்கிழமை.

நேரம்:- காலை 6-52 முதல் 8-04 வரை.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

- தேவஸ்தான பரிபாலன சபை

விளம்பர அன்பளிப்பு:

**ஸ்ரீதேவி தையலகம்**

பிரதான வீதி, சங்கானை.

அழகுக்கு அழகு செய்யும் தங்க ஆபரணங்களுக்கு

**மதுரா நகைமாடம்**

உரிமையாளர்: து. ஜெயராசசிங்கம்

தொல்புரம் மத்தி, சுளிபுரம்.

சகல மணிக்கூடுகளும் திருத்தப்படும்

**ஸ்ரார் வாச் வேக்ஸ்**

பிரதான வீதி, சங்கானை.

(சி/1477)



**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**

**கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

**விசேட பொதுக்கூட்டம்**

**05 — 10 — 1997** இல் நடைபெறவுள்ள இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலும், புதிய நிர்வாகசபை தெரிவிலும் பங்குபற்றத் தகுதியுடைய பிரதிநிதிகள், பதில் பிரதிநிதிகள் தெரிவு செய்யும் மேற்படி கூட்டம் **06 — 09 — 1997** அன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன)

**கௌரவ செயலாளர்.**

(49421)


# திணைக்களத்தின் நடைமுறையால் ஆண் தாதிகள் பெருமளவு பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

பயிலுநர் ஆண் தாதிகளைச் சேர்த்துக் கொள்வதில் சுகாதாரத் திணைக்களம் அமுல்படுத்தியுள்ள நடைமுறையால், ஆண் தாதியர் சேவையில் இணைந்து கொள்வது மிகமிகக் குறைந்தளவாகவே யாழ். குடாநாட்டில் காணப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரத்தில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலுமுள்ள தாதியர் பயிற்சிக்கல்லூரிக்கு பயிலுநர் தாதிகளைச் சேர்த்துக்கொள்ளும்போது ஐந்து பெண் தாதியருக்கு ஓர் ஆண் தாதி என்ற அடிப்படையிலேயே தெரிவு இடம்பெறுகிறது.

இதனால் பரீட்சையில் குறிக்கப்பட்ட புள்ளிகளுக்கு மேல் பெற்றும், சுகாதாரத் திணைக்களத்தின் இந் நடவடிக்கையினால், பல ஆண்களை மாணவத் தாதியராகப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர் தாதியரைச் சேர்த்துக் கொள்ள நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில் 49 பேரே யாழ். போதனா வைத்திய சாலை தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 31 பேரைச் சேர்த்துக் கொள்வதற்கான இடமிருந்த போதும் இதற்குரிய புள்ளிகளைப் பெண்கள் பெற்றுக் கொள்ளாமையினால் அவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

# சர்வதேச ஜூரர் குழு இலங்கை வருகிறது

கொழும்பு, செப். 4

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச ஜூரர்கள் குழு ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கை வரவிருக்கிறது.

ஆசியா, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் இக்குழு ஒரு மாத காலம் இலங்கையில் தங்கி மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராயும்.

ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்ட இந்த அமைப்பினருடன் ஜெனிவாவில் இயங்கும் சில அமைப்புக்கள் பேச்சுநடத்தி மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எடுத்து விளக்கியதையடுத்தே இக்குழு இலங்கை வருகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கும் இக்குழு செல்லும். (இ-3-164-173)

## எரிபொருள் விபத்து அதிகரிப்பு

வலிகாமம் தெற்கு, செப். 4

மண்ணெண்ணெய், பெற்றோல் போன்ற எரிபொருள்களை கவனயீனமாகக் கையாள்வதால் குடாநாட்டில் பல இடங்களிலும் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

இவ்வகையான எரிபொருள்களுக்கு அருகே குப்பி விளக்குகள், தீக்குச்சிகள் போன்றவற்றை கொண்டு செல்வதால் திடீரென தீப்பற்றி அதனால் ஆபத்துக்களும் சேதங்களும் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. (இ-152)

## முகமாலை பஸ் சேவை

தென்மராட்சி, செப். 4

யாழ். பஸ் நிலையத்திலிருந்து முகமாலை வரையிலான வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்சேவை கடந்த 29 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாலை 4.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் இப்பஸ் முகமாலை தேவாலயத்தில் தரித்து நின்று காலை 6.30 மணிக்கு புறப்படுமென தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## ஞாபகார்த்த பேருரை

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் ஞாபகார்த்தப் பேருரைகள் நடைபெறவுள்ளன,

திங்கட்கிழமை சீமாட்டி லீலாவதி இராமநாதன் குறித்த ஞாபகார்த்தப் பேருரை பிற்பகல் 3-00 மணிக்கு இடம்பெறும். கே. சோமசுந்தரம் பேருரையாற்றுவார்.

செவ்வாய்க்கிழமை சேர். பொன்னம்பலம் இராமநாதன் குறித்த ஞாபகார்த்தப் பேருரையை அதே நேரம் பேராசிரியர் ஸி. சூரியகுமாரன் நிகழ்த்துவர். (இ-5)

## மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்

அச்சுவேலி, செப். 4

மழை பெய்யாததால் யாழ். குடாநாட்டில் நெல் விதைக்க முடியாமல் வயல் நிலங்கள் வரண்டுபோய்க் காணப்படுகின்றன.

வயல்களை உரிய முறையில் பண்படுத்த முடியாமலும் —

உரியகாலத்தில் நெல் விதைக்க முடியாமலும் விவசாயிகள் மழை எப்போது வரும் என வானத்தைப் பார்த்து காத்திருக்கின்றனர்.

## 4 நாள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வர் வே. பிரபாகரன் இதற்கு பதில் அளித்து அந்த அமைப்புக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ''ஐ. நா. சிறுவர் நிதியத்தின் இந்தப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நாம் 4 நாள்கள் போர் அமைதி பேண முடிவு செய்துள்ளோம்.

''சிறுவர்களின் நல்வாழ்வு கருதி மேற்குறிப்பிட்ட தினங்களில் அமைதி பேணும் வகையில் நாம் செயற்படுவோம்.

அதேபோல ஸ்ரீலங்கா அரசும் போர் அமைதி பேணி தங்கள் நல்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் என எதிர்பார்க்கிறோம்'' என்றுள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசின் அறிவிப்பு எதுவும் நேற்று இரவு வரை வெளியாகவில்லை என்று செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-21-164)

## இராணுவ...

(இரண்டாம்பக்கத் தொடர்)

அனுராதபுரம் கூட்டுப் படைத் தலைமையக கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் அசோகா சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 55 ஆவது படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் காமினி குலதுங்க கொழும்பு 112 ஆவது படைப்பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

55 ஆவது படைப்பிரிவுத் தளபதியாக பிரிகேடியர் டி. எம். பேரறான் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-21-3)

## நேற்றுவரை...

(முதலாம் பக்கத் தொடர்)

எருவில் மதுபான நிலையக் காப்பாளர் எஸ். செயந்தன் நேற்றுக் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அதேநேரம் — புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் பணியில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஈடுபட்டுள்ளது. (இ-21-3-164)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org